Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 604/2025 PW-1**

Name : காளி
Father / Husband name : ரங்கநாதன்
Village : ஊரல்
Age : 51
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 08.04.2026

Accused absent. Petition u/s 317 CrPC filed and allowed. Defence counsel present. Witness identified by HC 1967 Selvam.

**முதல் விசாரணை**

நான் தற்போது விவசாய வேலை செய்கிறேன். சாட்சி சதீஷ் என்பவர் எனது பக்கத்து ஊர்க்காரர். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி ராஜ்குமாரின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது அல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 4, 5 மாதத்திற்கு முன்னர் பாம்பூண்டியிலுள்ள எனது நிலப்பிரச்சனை சம்மந்தமாக வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்திற்கு சென்றபோது சாட்சி கையொப்பம் கேட்டு வாங்கினார்கள். எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. என்முன்பாக போலிசார் எந்த தடயப்பொருளும் கைப்பற்றவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **கைப்பற்றுதல் உள்ள 1வது சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இவ்வழக்கின் எதிரி ராஜ்குமார் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது 26.06.2025 ந்தேதி நள்ளிரவு 2 மணியளவில் நானும் சதீஷ் என்பவரும் உறவினர் வீட்டிற்கு சென்றபோது வைரபுரம் - ஒரத்தி சாலையில் வைரபுரம் புதிய பெட்ரோல் பங்க் எதிரில் வெள்ளிமேடுபேட்டை போலிசார் TN 20 AL 2997 பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியை நிறுத்தி விசாரித்துக்கொண்டிருந்தபோது அதன் ஓட்டுநர் அங்கிருந்து ஓடிவிட்டார் எனவும், லாரி மற்றும் அதிலிருந்த சுமார் 1 யூனிட் கிராவல் மண் ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் கைப்பற்றி என்னிடமும், சதீஷிடமும் சாட்சியம் கையொப்பம் பெற்றார்கள் என்று போலிசார் விசாரணையில் உண்மையை சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். காவல் உதவி ஆய்வாளர் முரளி என்பவரை தெரியுமா என்றால் நிலப்பிரச்சனை சம்மந்தமாக சென்றபோது தெரியவந்தது. அப்போது மேற்படி கையொப்பத்தை செய்தேன் என்றால் சரிதான், பகல் 11 மணிக்கு மேற்படி கையொப்பத்தை செய்தேன்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 604/2025 PW-2**

Name : சதீஷ்
Father / Husband name : நாகேஷ்
Village : பட்டணம்
Age : 31
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 08.04.2026

Accused absent. Petition u/s 317 CrPC filed and allowed. Defence counsel present. Witness identified by HC 1967 Selvam.

**முதல் விசாரணை**

நான் தற்போது விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 காளி என்பவரை தெரியும், எனது நண்பர். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி ராஜ்குமாரின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 4, 5 மாதத்திற்கு முன்னர் ஒருநாள் காலை சுமார் 8, 9 மணிக்கு காளி என்பவரின் நிலப்பிரச்சனை சம்மந்தமாக வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்திற்கு சென்றபோது என்னிடம் சாட்சி கையொப்பங்களை கேட்டு வாங்கினார்கள். எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. என்முன்பாக போலிசார் எந்த தடயப்பொருளும் கைப்பற்றவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் உள்ள 2வது சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இவ்வழக்கின் எதிரி ராஜ்குமார் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது 26.06.2025 ந்தேதி நள்ளிரவு 2 மணியளவில் நானும் காளி என்பவரும் உறவினர் வீட்டிற்கு சென்றபோது வைரபுரம் - ஒரத்தி சாலையில் வைரபுரம் புதிய பெட்ரோல் பங்க் எதிரில் வெள்ளிமேடுபேட்டை போலிசார் TN 20 AL 2997 பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியை நிறுத்தி விசாரித்துக்கொண்டிருந்தபோது அதன் ஓட்டுநர் அங்கிருந்து ஓடிவிட்டார் எனவும், லாரி மற்றும் அதிலிருந்த சுமார் 1 யூனிட் கிராவல் மண் ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் கைப்பற்றி என்னிடமும், காளி என்பவரிடமும் சாட்சி கையொப்பம் பெற்றார்கள் என்று போலிசார் விசாரணையில் உண்மையை சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.